536

Moral Class Reading Book for the Young

Balavinodini Series No. 10

# Sri Ramachandra
# The Ideal Son

20 SEP 1923

BY

VARAKAVI TIRU

A. Subramanya Bharati

Editor of Balavinodini or the Children's friend
an illustrated Tamil Monthly

(WITH ILLUSTRATIONS)

VINODINI OFFICE
pettah, P. O. Madras.

[Price As. 3

224308

பாலவிநோதினி பிரசுரம் நெ. 10.

20 SEP 1923
MADRAS
C

உ

செந்திலாண்டவன்
திருவடி துணை

# ஸ்ரீராமச்சந்திரன் - -
# - - - நல்லபிள்ளை

திரு. அ. சிவாநந்தசாகரயோகீசுவரர்
மருகரும் மாணவரும்,
'பாலவிநோதினி'யின் ஆசிரியருமாகிய
வரகவி - திரு. அ. சுப்ரமண்யபாரதி
இயற்றியது.

(சித்திரப் படங்களுடன் கூடியது)

பாலவிநோதினி ஆபீஸ்,
இராயப்பேட்டை P. O. சென்னை.

காபிரைட்]

[விலை அணா 3.

PRINTED AT THE
NOBLE PRESS, TRIPLICANE,
MADRAS S. E.



ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்.

224308

20 SEP 1923

உ
செந்திலாண்டவன்
திருவடி துணை.

# ஸ்ரீ ராமச்சந்திரன் நல்லபிள்ளை

## I

### ஸ்ரீராமச்சந்திரனுடைய இளமையும் ஒழுக்கமும்.

நாம் வாசஞ்செய்யும் இந்தியாவிலே அயோத்தி என்னும் ஓர் அழகிய பட்டணத்தில் முன்னொரு காலத்தில் தசரதன் என்னும் ஒரு சக்ரவர்த்தி இருந்தான். அவன் அந்த நகரத்தைத் தனக்கு இராஜதானி நகரமாகக் கொண்டு உலகத்தை ஆண்டுவந்தான். அவனுக்குக் கௌஸல்யை, கைகேயி, ஸுமித்திரை என்று மூன்று மனைவிகள். ஆனால் வெகுகாலமாக அவனுக்குக்குழந்தைகள் இல்லாமலிருந்தன. ஆகையால் அரசன், புத்ரகாமேஷ்டி என்னும் ஒரு பெரிய யாகத்தைச் செய்தான்.

2. யாகத்தைச் செய்து முடித்த பிறகு அவ்வரசன் கௌஸல்யையினிடம் ஒரு பிள்

ளையையும், கைகேயியினிடம் ஒரு பிள்ளையையும், ஸுமித்திரையினிடம் இரண்டு பிள்ளைகளையும் அடைந்தான். கௌஸல்யையின் பிள்ளைக்கு ஸ்ரீராமச்சந்திரன் என்னும் அழகிய பெயரையும், கைகேயியின் பிள்ளைக்குப் பரதன் என்கிற பெயரையும், ஸுமித்திரையின் குழந்தைகளில் மூத்தவனுக்கு லக்ஷ்மணன் என்கிற பெயரையும் இளையவனுக்குச் சத்ருக்நன் என்கிற பெயரையும் குல குருவாகிய வஸிஷ்டர் சூட்டியருளினார்.

3. ஆக இந்த நால்வரில் ஸ்ரீராமச்சந்திரன் மூத்தவன்; அடுத்தவன் பரதன்; மூன்றாமவன் லக்ஷ்மணன்; சத்ருக்நன் எல்லோருக்கும் இளையவன். நால்வரும் அழகில் இவர்களுக்கு ஒப்பானவர்களும் மேலானவர்களும் இல்லையென்று யாவரும் புகழ்ந்து கொண்டாடும்படி விளங்கினர். இவர்கள், வெகுகாலத்திற்குப் பிறகு சக்ரவர்த்திக்கு அருமையாகப் பிறந்த குழந்தைகளாகையால், ஒருகுறைவும் இல்லாமல் வளர்ந்து வந்தார்கள். தக்க வயது வந்ததும் தசரதன் நால்வரையும் குல குருவாகிய வஸிஷ்டரிடம் கல்வி பயில ஒப்புவித்தான். அரசர்களுக்குரிய யானையேற்றம் குதிரையேற்றம் வில்வித்தை யுத்தப்பயிற்சி முதலியவற்றையும்

கற்றுக் கொடுத்தான். நால்வரும் குமார பருவத்தை அடைந்து மகா புத்திசாலிகளாகவும் ஒப்பும் உயர்வுமில்லாத வீரர்களாகவும் விளங்கினர்.

4. இவர்களை இப்பொழுது எல்லோரும் புகழ்ந்து மகிழ்ந்தனர். இவர்களுள் ஸ்ரீராமச்சந்திரனே தன் அருமையான குணங்களால் எல்லோரையும் அதிகமாக ஸந்தோஷப்படுத்தினன். இந்தக் காலத்தில் ஒருநாள், விசுவாமித்திரர் என்னும் ஒரு முனிவர் இராஜாவினுடைய சபைக்கு வந்தார். தசரதன் அந்த முனிவரை மரியாதையுடன் வரவேற்று நமஸ்காரஞ் செய்தான்; ஆசனத்திலே உட்காரவைத்தான்; தானும் தன் ஆசனத்திலே உட்கார்ந்து, "சுவாமி, எளியேனை நாடி வந்த விஷயம் யாதோ?" என்று வெகு மரியாதையுடன் கேட்டான். முனிவர், "வேந்தே, நீர் எனக்கோர் உதவி புரிதல் வேண்டும்" என்றார். தசரதன், ஸந்தோஷத்துடன், "அவ்வுதவி யாது?" என்று கேட்டான். முனிவர், "நான் செய்யும் வேள்விக்குக் காவலாக ஸ்ரீராமச்சந்திரனை அனுப்பவேண்டும்" என்று கேட்டார். இந்தப் பேச்சைக் கேட்டதும் அரசனுடைய மனந் துடித்தது. உடல் பதறியது.

உயிர்சோர்ந்தது. அவன் தன் இரண்டு கரங்களையும் தலைமேல் குவித்துக்கொண்டு நின்று, "சுவாமி, ஸ்ரீராமன் சிறுகுழந்தை யாயிற்றே! அவன் எப்படிக் காட்டிலிருந்து காவல்புரிவான்! அவனுக்குப் பதிலாக நான் வருகிறேன். என்னை அழைத்துக்கொண்டு போகலாம்" என்றான்.

5. முனிவர், உடனே கோபங்கொண்டு, ஆசனத்தைவிட்டு எழுந்தார். அப்பொழுது அங்கிருந்த வஸிஷ்டர், அவருடைய கோபத்தைத் தணித்து, அவரை ஆசனத்திலே உட்காரவைத்தார்; அரசனைப்பார்த்து, "இந்த முனிவரால் உமது புத்திரன் சகல தன்மைகளையும் அடைவான்; ஆகையினால் இவரோடு உமது புத்திரனைக் கொஞ்சமும் ஆலோசியாமல் அனுப்பும்" என்று சொன்னார். குருவினுடைய கட்டளையாகையினால் அரசன் உடனே, அவர் சொல்லில் மதிப்பு வைத்தான்; "சுவாமி, அப்படியே செய்வேன்" என்று கூறி ஸ்ரீராமச்சந்திரனை விசுவாமித்திருடன் அனுப்பத் தீர்மானித்தான்; அவனுக்குத் துணையாக லக்ஷ்மணனையும் அனுப்ப எண்ணி இருவரையும் உடனே சபைக்கு வரவழைத்தான்; அவர்கட்குச் சொல்லவேண்டிய புத்திமதிகளைச்

சொல்லி அவர்களை முனிவரிடம்ஒப்புவித்து, "சுவாமி, இவர்களைக் காப்பது உமது கடன்" என்று தெரிவித்துக்கொண்டு வந்தனம் செய்தான்.

6. முனிவர், "வேந்தே, கவலை வேண்டாம்; ஸந்தோஷ மடைந்தோம்" என்று இனியமொழி சொல்லி எழுந்து விடைகொண்டு இரண்டு குமாரர்களுடனும் புறப்பட்டார். தசரதன், அப்பொழுது ஸ்ரீராமலக்ஷ்மணர்களைத் தழுவி முத்தமிட்டு "கண்மணிகளே! நீங்கள், பெரியவராகிய முனிவரிடும் வேலைகளைக் கருத்தோடு செய்து அவருடைய ஆசீர்வாத மடைந்து சுகமாகத் திரும்பி வாருங்கள்" என்று வாழ்த்தி அனுப்பினான். முனிவர் பிறகு அவர்களுடன் தாம் வேள்வி செய்யும் வனத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

## II

### ஸ்ரீராமச்சந்திரனுடைய தீரச்செயல்களும் திருமணமும்.

ஸ்ரீராமச்சந்திரனும் லக்ஷ்மணனும் காட்டிலேயுள்ள விசேஷங்களை யெல்லாம் கண்டு களித்தனர்; பெரியவர்களை அடுத்திருப்பவர்களுக்கு ஒரு குறைவும் நேராதென்பதைத் தெரிந்துகொண்டனர். நாட்

காடவிடக்காட்டிலே அவர்களுக்குவேண்டிய சௌகரியங்க ளெல்லா மிருந்தன. ஆகையி னால் அவர்கள் அங்கே சந்தோஷமா யிருந் தனர்; முனிவரின் சொற்படி நடக்க விரும் பினர். இப்படிப்பட்ட அவர்களுடைய தன் மையைக் கண்டு விசுவாமித்திரர் மகிழ்ந் தார்; அவர்களிடம் இராக்ஷஸர்களுடைய கொடிய குணங்களைச் சொன்னார்: அவர் களாலே நேரிடும் இடையூறுகளையும் தெரி வித்தார்; பிறகு தாம் செய்யும் வேள்விக்குக் காவலாக இருவரையும் நியமித்தார்; அப் பால் வேள்வி தொடங்கி நடத்தினார்.

2. அந்த வேள்வியைக் கெடுக்கத் தாடகை யென்னும் ஓர் அரக்கி அங்கே பேரி ரைச்சலுடன் தோன்றி, மரங்களையும் மலை களையும் வீசியெறிந்தாள். அந்த அரக்கியை ஸ்ரீராமச்சந்திரன் ஒரு பாணம் விட்டுக் கொன்று பூமியிலே வீழ்த்தினான். பிறகு அந்த அரக்கியின் பிள்ளைகளாகிய மாரீச னும் ஸுபாகுவும் வந்தனர். இவர்களில் ஸுபாகுவை ஸ்ரீராமச்சந்திரன் ஓர் அம்பி னாலே கொன்றான். மாரீசன் அதுகண்டு பயந்து எங்கேயோ ஓடிமறைந்து விட்டான்.

3. அப்பால் விசுவாமித்திரர் வேள் வியை வெகு நன்றாய்ச் செய்துமுடித்தார்;

ஸ்ரீராம லக்ஷ்மணர்களை அழைத்துக் கொண்டு அந்தக் காட்டின்வழியே போனார். அங்கே வழியில் கிடந்த ஒரு கல்லில் ஸ்ரீராமச்சந்திரனுடைய கால்பட்டது. அந்தக் கல் அப்பொழுதே பெண்ணுருவமாயிற்று. ஸ்ரீராமனும் லக்ஷ்மணனும் "ஆ! என்ன இது, கல் பெண்ணாய் விளங்குகிறது" என்றெண்ணி ஆச்சரியப் பட்டனர். முனிவர், ஸ்ரீராமனை நோக்கி, "இவர் கௌதமர் என்னும் ஒரு முனிவருடைய மனைவியார்; இவர்க்கு அகல்யை என்று பெயர். ஒருகால் முனிவர் இவரிடம் கோபங்கொண்டு சபித்தார். அதனால் இவர் இப்படிக் கல்லானார். இப்பொழுது உன் பாதம் பட்டதனால் அந்தச் சாபம் நீங்கியது" என்று சொல்லி, அம்மாதை, கௌதமரிடம் அனுப்பினார்; பிறகு ஸ்ரீராமனையும் லக்ஷ்மணனையும் மிதிலைமா நகரத்திற்கு அழைத்துச் சென்றார்.

4. மிதிலையில் ஜனகமகாராஜன் அரசனாயிருந்தான். அவன் தன்மகள் ஸீதைக்குத் திருமணம் நடத்த நிச்சயித்து அதற்கு ஒரு வில்லைப் பந்தயமாக வைத்திருந்தான். அதற்காக இச்சமயம் இந்த நகரத்திற்குச் சகல தேச அரசர்களும் வந்திருந்தனர். இப்பொழுது ஜனகனுடைய சபைக்கு விசுவாமித்திர

முனிவர் ராமச் சந்திரனுடனும் லக்ஷ்மணனுடனும் சென்றார். ஜனகன், விசுவாமித்திரருக்குச் சகல உபசாரங்களையும் செய்தான். விசுவாமித்திரர் அரசனை ஆசீர்வதித்து அவனுக்கு ராமலக்ஷ்மணர்களை இன்னாரென்று தெரிவித்தார்; "இச்சிறுவன் இந்தவில்லை வளைப்பான்" என்று ராமச் சந்திரனைச் சுட்டிக்காட்டினார். உடனே அரசன், ராமருக்கு அந்தவில்லைக் காட்டினான். அந்தவில்லை ராமச்சந்திரன் எடுத்து வளைத்து மளமளவென்று முறித்தான். எல்லோரும் ராமச்சந்திரனுடைய வீரம்பெரிதென்று புகழ்ந்து அவன்மீது மலர்மாரி பொழிந்தனர்.

5. பிறகு ஜனகமகாராஜன், தசரத சக்ரவர்த்திக்குத் திருமண ஓலை அனுப்பினான். தசரதன், தன் குரு, மந்திரிமார், பந்துமித்திரர் எல்லோருடனும் புறப்பட்டு மிதிலை வந்து சேர்ந்தான். பிறகு நல்ல முகூர்த்த வேளையில் ராமச்சந்திரனுக்கு ஸீதா தேவியை ஜனகன் அக்நிசாக்ஷியாக விவாகம் செய்து கொடுத்தான். பெரியவர்கள் மகிழ்ந்து தம்பதியை ஆசீர்வதித்து அக்ஷதை தூவினர்! மங்கையர் மங்கள கீதம் பாடி வாழ்த்தினர்! தேவர்கள் பூமழை பொழிந்து



ஸீதா கல்யாயாணம்.

120-ம் பக்கம் பார்க்க (எப்ரல்மீ)

மகிழ்ந்தனர்! மங்கள வாத்தியங்கள் முழங்கின.

6. இதற்கப்பால் ஜனகன் பெரியவர்களுடன் ஆலோசித்துத் தன்னுடைய இளைய பெண்ணாகிய ஊர்மிளையை லக்ஷ்மணனுக்குக் கொடுத்தான். தன் தம்பிபெண்களிருவரில் மாண்டவியைப் பரதனுக்கும், சுருதகீர்த்தியைச் சத்ருக்நனுக்கும் கொடுத்தான். பிறகு விசுவாமித்திரர் எல்லோரையும் ஆசீர்வதித்துத் தமதாச்ரமம் சென்றார். தசரதன், தான் தன் குருவின் சொல்லைக் கடவாமல் விசுவாமித்திரருடன் ராமலக்ஷ்மணர்களை ஒப்புவித்ததினாலே அடைந்த நன்மைகளை எண்ணி யெண்ணி மகிழ்ந்தான்.

7. இவ்வாறு திருமணம் முடிந்த பிறகு தசரதன் எல்லோருடனும் ஜனகனிடம் விடைகொண்டு அயோத்திக்குப் புறப்பட்டான். அவனோடு சேனைகளும் யானைகளும் குதிரைகளும் ஏராளமாகப்புறப்பட்டன. இப்படிப் புறப்பட்டு வரும் வழியில் ஸ்ரீராமச்சந்திரனைப் பரசுராமர் என்பவர் எதிர்த்தார். ஸ்ரீராமச்சந்திரன் அவருடைய கரத்து வில்லை வாங்கி நாணேற்றி அம்பு தொடுத்தான்; அதற்கிலக்காக அவருடைய தவத்தின் பயனை அடைந்து அயோத்திக்குச் சென்றான்.

இப்படிப்பட்ட வைபவங்களுடன் ராமச்சந்திரன் அயோத்திக்கு வரவே, அயோத்திமாநகரத்தில் யாவரும் குதூகலம் அடைந்தனர். ராமச்சந்திரன் விசுவாமித்திரரை அடுத்து அவருடைய திரு அருளினாலே சகல வித்தைகளையும் மந்திர உபதேசங்களையும் பெற்றான்! ஒருவராலும் வளைக்க முடியாத வில்லை வளைத்து முறித்து ஸீதா தேவியை மனைவியாகக் கொண்டான்! மகாபராக்ரம சாலியாகிய பரசுராமருடைய கர்வத்தை அடக்கி ஜயலக்ஷ்மியை அடைந்தான். தசரதமகாராஜன் வெகுகாலம்பிள்ளைகளில்லாமல் வருந்தினனென்றாலும் நல்ல அறிவும் ஆற்றலும் அழகும் வாய்ந்த பிள்ளைகளை அடைந்தான்—என்று யாவரும் அங்கங்கே கூடிப் பேசிப் புகழ்ந்தனர்.

2. அப்பால் கொஞ்ச நாட்களுக்கெல்லாம், பரதன் சத்ருக்நனுடன் தன் பாட்டனரைப் பார்க்க, கேகய நாட்டிற்குச் சென்றான். அப்பொழுது ஒருநாள், தசரதன், தன் சபைக்கு வஸிஷ்டரையும் மந்திரிமார்களையும் வரவழைத்து "எனக்கு வயதாய் விட்டது. நான் இனிக் காட்டுக்குப் போய்த்

தவம் செய்ய விரும்புகிறேன்; ராமச்சந்திரன் நல்ல புத்திசாலியாயும் எல்லோரிடத்திலும் அன்புடையவனுயும் இருக்கிறுன்; எல்லோரும் அவனை நேசிக்கிறுர்கள். ஆகையினுல் அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய எண்ணுகிறேன். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

3. அவர்கள், இதைக் கேட்டதும் தங்களுடைய அரசனை விட்டுப்பிரிவதை எண்ணி முதலில் வருந்தினர். பிறகு, ராமச்சந்திரன் நல்ல அறிவும் இராஜ்ய பரிபாலனம் செய்யும் சாமர்த்தியமுமுடையவன் என்று எண்ணி, வேந்தனைப்பார்த்து, "பிரபுவே! வயது சென்ற இக்காலத்திலே தாம் ஒழிவடைவது நல்லது. காலத்தைத் தவத்திலே செலவழிப்பதும் ராமச்சந்திரனிடத்தில் இராஜ்யத்தை ஒப்புவிப்பதும் நியாயமேயாம்:—

4. "ராமச்சந்திரன் பெரியவர்களுடைய பேச்சைத் தெய்வத்தின்கட்டளையாகக் கொண்டு கீழ்ப்படிந்து நடப்பவன். அவன் எல்லோரிடத்திலும் அன்புடையவன். அவனிடத்தில் அந்த அன்பை வளர்க்கும் பொறுமை சிறந்து விளங்குகிறது; எல்லோரையும் சமமாய் நடத்தும் தயை தழைத்திருக்

கிறது. மாறுபாடில்லாமல் இருப்பதற்கு வேண்டிய உதாரத்வம் உயர்ந்திருக்கிறது. தனக்குத்தானே பெருமை அடையாமல் இருப்பதற்கு வேண்டிய அடக்கம் அமைந்திருக்கிறது; ஒழுங்கீனமாய் நடவாதிருப்பதற்கு வேண்டிய உபசரணை அவனிடம் உடன் பிறந்த பிறப்பைப் போலிருக்கிறது. தன்னலத்தை விரும்பாமலிருப்பதற்கு வேண்டிய பொதுநலக் கொள்கை அவனிடம் பூரணமாயிருக்கிறது; கெட்ட எண்ணம் உண்டாகாமலிருப்பதற்கு வேண்டிய அபேத எண்ணம் அவனை அடுத்திருக்கிறது; அநீதி வழியிலே மகிழாமல் நீதி வழியிலே மகிழ்வதற்கு வேண்டிய ஸத்தியம் அவனிடம் நிலைத்திருக்கிறது. பிரபுவே! ராமச்சந்திரன் இப்படிப்பட்ட நல்ல குணங்களுடையவன். ஆகையினால் அவன் இந்த ராஜ்யத்தை ஆளுந்திறமையும் வீரமுமுடையவனென்பதில் ஐயமில்லை. அவனுக்கு எல்லோரும் அடங்கி நடப்பார்கள்; அவனை நேசிப்பார்கள். கவலையில்லாமல் அவனிடம் அரசை ஒப்புவிக்கலாம்'' என்று எல்லோரும் ஒரு மனதாய்ச் சம்மதம் தந்தனர்.

5. தசரதன், அவ்வாறே செய்யத் தீர்மானித்து, ராமச்சந்திரனை ஸபைக்கு வர

வழைத்தான். ராமச்சந்திரன் அன்புடைய நல்லபிள்ளை, புத்திசாலி என்று எவரும் புகழும்படி ஸபைக்குவந்து எல்லோரையும் முறைப்படி பணிந்து நின்றான். அவனைக்கண்டு எல்லோரும் மகிழ்ந்து வாழ்த்தினர். தசரதனும் ஸந்தோஷமடைந்து, மைந்தனை நோக்கி, "ராமா! உன்னை இந்த இராஜ்யத்துக்கு அரசனாக்குகிறேன். நான் தவஞ் செய்வதற்காகக் காட்டுக்குப் போகிறேன். இவர்களநுமதி பெற்று இவற்றைத் தீர்மானஞ் செய்திருக்கிறேன்; உன் சம்மதம் என்ன? வயதான எனக்குத் தவத்தைவிட மேலான துணையுண்டோ?" என்று கேட்டான்.

6. ராமச்சந்திரன், இதைக் கேட்டதும் தன் இரு கரங்களையும் கூப்பி வணங்கி நின்று, "என் அருமைத் தந்தையே! பெரியோர்களே! நான் இராஜ்யத்தை ஆளும் வல்லமை ஒரு சிறிது மில்லாத சிறியன்; இராஜ நீதி உணராதவன்; இருந்தாலும் பெரியோர்களாகிய உங்களுடைய விருப்பம் அதுவாயின், நான் அவ்வாறு நடக்கக் கடமைப்பட்டவனாகிறேன். ஆகையால் கட்டளையை விருப்போடு ஏற்றுக் கொள்கிறேன்" என்று வெகு பணிவாய் மறுமொழி சொன்னான்.

7. இந்த மறுமொழி கேட்டதும் தசரதன் ராமச்சந்திரன் பிறந்தானென்னும் செய்தி செவியிலே விழுந்தபோது அடைந்த ஸந்தோஷத்தைவிட அதிகமான மகிழ்ச்சியை அடைந்தான். பெரியவர்களெல்லோரும் பெருமகிழ்ச்சிகொண்டு ராமச்சந்திரனைப் புகழ்ந்தனர்; "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை என்பதை உணர்ந்த உனக்கு ஈசுவரன் ஸர்வமங்களங்களையும் கொடுத்தருள்வாராக!" என்று வாழ்த்தினர். பிறகு வஸிஷ்டர் பட்டாபிஷேகத்திற்குரிய நல்ல நாளைப் பார்த்துச் சொன்னார். சபை கலைந்தது.

## IV

### ஸ்ரீராமச்சந்திரனுக்குத் தந்தையிட்ட கட்டளை.

ஸபையில் இப்படித் தீர்மானம் செய்தவைகளையெல்லாம் மந்தரை யென்கிற தாதி பதுங்கியிருந்து கேட்டுக்கொண்டிருந்தாள். அவள் கைகேயியின் அந்தப்புரத்திற்குப் போய் அவளைத் தூக்கத்திலிருந்து எழுப்பி, "நாளைக்கு உமது சககளத்திபிள்ளை ராமனுக்குப் பட்டங்கட்டப் போகிறார்கள்" என்று சொன்னாள். கைகேயி உடனே "என் கண்மணியாகிய ராமனுக்கு நாளைக்குப் பட்டங்கட்டப் போகிறார்களா? நல்லது

ஸந்தோஷம்!" என்று சொல்லித் தன் கழுத்தில் அ[illegible] ம[illegible]ரத்தைக் கழற்றி அவளுக்கு வெகுமதி கொடுத்தாள். மந்தரை அதனைப்பெற்றுக்கொள்ள மறுத்து "நல்ல ஸந்தோஷம்! நன்றாயிருக்கின்றது வெகுமதி கொடுப்பது! ராமனுக்குப் பட்டங் கட்டினால் உமக்கு வாழ்வு வந்துவிட்டதாக எண்ணுகிறீர் போலிருக்கிறது!" என்று கேட்டாள்.

**2.** கைகேயி, "ஏன் அப்படிச் சொல்லு கின்றாய்? ராமன் என்னிடத்தில் அன் புடையவன்; அல்லாமலும் நல்ல பிள்ளை என்கிற பேரெடுத்திருக்கிறான். அவனை ஊரெல்லாம் புகழ்கிறது. அவனுக்குப் பட் டங்கட்டினால் நமக்கெல்லாம் வாழ்வு வந்த தென்பதில் என்ன ஸந்தேகம்?" என்று கேட்டாள். மந்தரை, "ராமனை நீர் நல்லபிள்ளை யென்று எண்ணுவதும் ஜனங் கள் அவனை நல்ல பிள்ளை யென்று புகழ்வ தும் இப்பொழுது சரியாயிருக்கும். அவன் இராஜ்ய ஸம்பத்திற்கு உரியவனாய் இராஜா வாய் விடுவானானால் அப்பொழுது அவனை நீர் இப்படிப்பட்டவ னென்று தெரிந்து கொள்வீர்; ஸம்பத்து எப்படிப்பட்டவனை யும் கர்வத்திற் குள்ளாக்குமென்பதை நீரேன்

அறிந்துகொள்ளவில்லை. கர்வங்கொண்டவன் எவரைமதிப்பான்? அவனுக்கு நல்லார் பொல்லார் உற்றார் பெற்றார் என்பதும் தெரியுமோ? 'ஈட்டி யெட்டிய வரையில் பாயும், பணம் பாதாளம் வரையில் பாயும்' என்பது பழமொழியல்லவா? இதைப்பற்றிக் காரியம் மிஞ்சிப்போன பிறகு ஆலோசிப்பதில் பயனில்லை. வெள்ளம் வருமுன் அணை போட்டுக்கொள்வது அறிவே அல்லாமல் வந்த பின் கையைப் பிசைந்துகொண்டு நிற்பது அறிவாகாது. ஆகையால், எது செய்யத் தக்கதோ அதை இப்பொழுதே செய்து கொள்ளும்; நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன்! என்னுடைய பேச்சை இப்பொழுது மதியாவிட்டால், பிறகு நீரும் நானும் உமது பிள்ளை பரதனும் ராமனுக்கும் அவன் அன்னையாகிய உமது சககளத்தி கௌஸல்யைக்கும் அடிமைகளாக வேண்டியதுதான்; அதையும் சொல்லிவிட்டேன். இனி உமதிஷ்டம்'' என்றாள்.

3. கைகேயி, சற்று நேரம் சும்மா இருந்து பிறகு "ஆம்; நீ சொல்லுகிறபடி நேரிடுவது கூடும். இது உலகத்திற்கு இயற்கையாம். இப்பொழுதுதான் என் மனதிற்கு நீ சொன்னது நன்றாய்ப் படுகிறது. இனி

## IV

### ஸ்ரீராமச்சந்திரனுக்குத் தந்தையிட்ட கட்டளை

ஸபையில் இப்படித் தீர்மானம் செய்த வைகளையெல்லாம் மந்தரை என்கிற தாதி பதுங்கியிருந்து கேட்டுக்கொண்டிருந்தாள். அவள் கைகேயியின் அந்தப் புரத்திற்குப் போய் அவளைத் தூக்கத்திலிருந்து எழுப்பி, "நாளைக்கு உமது சககளத்திப் பிள்ளை ராம னுக்குப் பட்டங்கட்டப்போகிறார்கள்" என்று சொன்னாள். கைகேயி உடனே "என் கண் மணியாகிய ராமனுக்கு நாளைக்குப் பட்டங் கட்டப் போகிறார்களா? நல்லது ஸந்தோ ஷம்!" என்று சொல்லித் தன் கழுத்தி லணிந்திருந்த முத்தாரத்தைக் கழற்றி அவ ளுக்கு வெகுமதி கொடுத்தாள். மந்தரை அத னைப் பெற்றுக்கொள்ள மறுத்து, "நல்ல ஸந்தோஷம்! நன்றாயிருக்கின்றது வெகு மதி கொடுப்பது! ராமனுக்குப் பட்டங் கட் டினால் உமக்கு வாழ்வு வந்துவிட்டதாக எண்ணுகிறீர்கள் போலிருக்கிறது?" என்று கேட்டாள்.

2. கைகேயி, "ஏன் அப்படிச் சொல்லு கின்றாய்? ராமன் என்னிடத்தில் அன்புடை யவன்; அல்லாமலும் நல்லபிள்ளை என்கிற பேரெடுத்திருக்கிறான். அவனை ஊரெல்லாம்

புகழ்கிறது. அவனுக்குப் பட்டங் கட்டினால் நமக்கெல்லாம் வாழ்வு வந்த தென்பதில் என்ன ஸந்தேகம்?" என்று கேட்டாள். மந்தரை, "ராமனை நீர் நல்லபிள்ளை யென்று எண்ணுவதும் ஜனங்கள் அவனை நல்ல பிள்ளை யென்று புகழ்வதும் இப்பொழுது சரியாயிருக்கும். அவன் இராஜ்ய ஸம்பத்திற்கு உரியவனாய் இராஜாவாய் விடுவானானால் அப்பொழுது அவனை நீர் இப்படிப் பட்டவனென்று தெரிந்து கொள்வீர்; ஸம்பத்து எப்படிப் பட்டவனையும் கர்வத்திற்குள்ளாக்கு மென்பதை நீரேன் அறிந்து கொள்ளவில்லை. கர்வங்கொண்டவன் எவரை மதிப்பான்? அவனுக்கு நல்லார் பொல்லார் உற்றார் பெற்றார் என்பதும் தெரியுமோ? ஈட்டி யெட்டிய வரையில் பாயும், பணம் பாதாளம் வரையில் பாயும் என்பது பழமொழியல்லவா? இதைப் பற்றிக் காரியம் மிஞ்சிப்போனபிற்கு ஆலோசிப்பதில் பயனில்லை. வெள்ளம் வருமுன் அணை போட்டுக் கொள்வது அறிவே அல்லாமல் வந்தபின் கையைப் பிசைந்து கொண்டு நிற்பது அறிவாகாது. ஆகையால் எது செய்யத் தக்கதோ அதை இப்பொழுதே செய்துகொள்ளும்; நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன்! என்னுடைய பேச்சை இப்பொழுது

மதியாவிட்டால், பிறகு நீரும் நானும் உமது பிள்ளை பரதனும் ராமனுக்கும் அவன் அன்னையாகிய உமது சக்களத்தி கௌஸல்யைக்கும் அடிமைகளாக வேண்டியதுதான்; அதையும் சொல்லிவிட்டேன். இனி உமதிஷ்டம்'' என்றாள்.

3. கைகேயி சற்றுநேரம் சும்மாவிருந்து பிறகு "ஆம்; நீ சொல்லுகிறபடி நேரிடுவது கூடும். இது உலகத்திற்கு இயற்கையாம். இப்பொழுதுதான் என் மனத்திற்கு நீ சொன்னது நன்றாய்ப் படுகிறது. இனி இதற்கு என்ன செய்யத் தக்கது? அதையும் நீயே சொல்'' என்று கேட்டாள். மந்தரை, "அம்மணி, முன் ஒரு பெரிய சண்டை நடந்தபோது அரசரிடம் நீர் இரண்டுவரம் பெற்றிருந்தீர்க ளல்லவா? அவ்விரண்டில் ஒன்றால் ராமனைப் பதினான்கு வருஷம் காட்டிற்கனுப்பவும், மற்றொன்றால் பரதனுக்குப் பட்டங் கட்டவும் செய்யும்'' என்றாள். கைகேயி இந்த யுக்தியைக் கேட்டு மகிழ்ந்தாள்; மந்தரையைப் புகழ்ந்தாள்; அப்படியே செய்வதாக வாக்களித்து அவளை அனுப்பிவிட்டாள்.

4. பிறகு கொஞ்ச நேரத்திற் கெல்லாம் தசரதன் கைகேயியின் அந்தப் புரத்திற்குப்

போனான்; அவள் தலைவிரி கோலமாய் ஓர் அறையிலே படுத்துக் கிடப்பதைப் பார்த்தான். அவள் அப்படிப் படுத்திருக்கக் காரண மென்னவென்று கொஞ்சநேரம் நின்று சிந்தித்தான்; பிறகு அவளருகே போய் உட்கார்ந்து "கண்ணே! என் காதலியே!" என்று அன்பாய் அழைத்து "நீ இப்படி அலங்கோலமாய்ப் படுத்திருப்பதினால் ஏதோ கோபங் கொண்டிருக்கிறாய் என்று தெரிகிறது. நீ கோபங்கொள்ளக் காரணமென்ன? உனக்கென்ன வேண்டும்? எது வேண்டுமானாலும் கேள்; ஸத்தியமாய்த் தருகின்றேன்" என்றான். ஸத்தியமாய்த் தருகின்றேன் என்ற பேச்சு செவியிலே விழுந்ததும், கைகேயி அதிலே பிடிப்பிருக்கின்றதென்று கண்டுகொண்டாள்; தசரதனைக் கண்விழித்துப் பார்த்து, "ஸத்தியமாய்த் தருகின்றேன் என்று சொல்லியபடி நடக்கவேண்டும்" என்று சொல்லி அரசனைக் கட்டுபடுத்திக் கொண்டாள்; தன் எண்ணத்தைக் கூசாமல் தெரிவித்தாள்.

5. தசரதன், அதைக் கேட்டதும், "ஆ என் கண்ணனை ராமச்சந்திரனையா காட்டுக்கனுப்ப வேண்டுமென்கிறாய்? அவனை இப்படிப்பட்ட கொடிய தண்டனைக்குள்

ளாக்க நீ எப்படி மனங்கொண்டாய்? உன்னைத் தூண்டிய பாவி யார்? பரதனைவிட ராமச்சந்திரனை நல்லவனென்று நீ எத்தனையோ முறை என்னிடம் சொல்லியிருக்கிருயே! உன் விருப்பப்படி பரதன் இந்த இராஜ்யத்தை ஆளட்டும். ராமனைக் காட்டுக் கனுப்பாமலிரு" என்று சொன்னன்; அவள் காலில் விழுந்து பணிந்து கேட்டுக் கொண்டான். கைகேயி சிறிதும் மனமிரங்கவில்லை. தான் கொண்ட எண்ணத்திலேயே பிடிவாதமாயிருந்தாள். மன்னனை நோக்கி "நீர் யாரைக் கும்பிடுகின்றீர்? யார் காலில் விழுகின்றீர்? என்னை அயலாக எண்ணலாமா? நம்மிருவருடைய சரீரமும் ஒன்று என்பதை மறந்து போனதேன்? என் வீண் மாய்மாலம்? சொன்னவாக்கைக் காப்பாற்றும்" என்ருள். அரசன், "அடியே! ராமன் என் கண்ணல்லவா? கருத்தல்லவா? கண்ணுளனல்லவா? என்னைக் காப்பவனல்லவா! என் தெய்வமும் அவனல்லவா? அவன் நகரைவிட்டு நீங்கினுல் என்னுடலைவிட்டு என் உயிரும் நீங்கும்! இந்தப் பிடிவாதத்தை விடு" என்று கூறிக் கெஞ்சிக் கேட்டான். கைகேயி கொஞ்சமும் தன் பிடிவாதத்தை விடவில்லை. இது கண்டு தசரதன், "ராமா! ராமா" என்று

சொல்லிக்கொண்டே தன்னை மறந்து பூமியில் சாய்ந்தான்.

6. இப்பொழுது பொழுது விடியுந்தருணமாயிற்று. பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய யாவும் சித்தமாயின. வஸிஷ்டர் முதலியவர்கள் ஸபாமண்டபத்திற்கு வந்து தசரதனின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்நேரமாயும் அரசன் வாராதகாரணமறிய, ஸுமந்திரன் கைகேயியின் அந்தப்புரத்திற்கு வந்தான்; தசரதன் விழுந்துகிடக்கும் அலங்கோலத்தைக்கண்டு கலங்கினான். கைகேயி, "ஸுமந்திரரே, போய் ராமனை இங்கே அழைத்து வாரும்; மகாராஜா அவனைப் பார்க்க விரும்புகிறார்" என்றாள். ஸுமந்திரன் "இதோ போய் அழைத்து வருகின்றேன்" என்று சொல்லி வணங்கிச் சென்றான்.

7. ஸுமந்திரன் அங்கிருந்து சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம், ராமச்சந்திரன் அங்கே வந்து இருகரங்களையும் குவித்துத் தலை குனிந்து தொழுது, "இதோ வந்தேன் என்னை அழைத்ததேன்?, உத்தரவிற்கு எதிர் பார்க்கின்றேன்" என்று வெகு பணிவோடு கூறினான். இப்பொழுது கைகேயி, ராமச்சந்திரனை நோக்கி, "அப்பா, உன்னை

உன் தந்தை தவக்கோலம் பூண்டு பதி னுன்கு வருஷம் காட்டுக்குப் போய்வரக் கட் டளையிட் டிருக்கின்ருர்! பரதனுக்கு இந்த ராஜ்யத்தை ஆளக் கொடுத்திருக்கின்ருர்! இவை யிரண்டும் நான் அவரிடம் கொண்ட இரண்டு வரத்தின்படி ஏற்பட்டன. அப்பா நீ உத்தமனுகையால், உன்தந்தை வாக்கைக் காப்பாற்றி அவரை ஸத்தியந் தவருதவ ராகச் செய்! நீ உன்னுடைய மேலான குணத்தை நிலைநிறுத்திக்கொள்; நல்ல பிள்ளை யென்கிறபெயரை அடை" என்ருள்.

8. ராமச்சந்திரன், உடனே கைகேயி யைக் கரங்குவித்துத் தொழுது, "அம்மணி, இதற்கென்ன சிந்தனை? அடே ராமா இந் தத் தீயில் குதி! இந்தக் கடலிலே வீழ்ந்து மூழ்கு! இந்த விஷத்தைக் குடி என்று சொன்னுலும் அந்த நிமிஷமே தாமதியா மல் செய்வேன்! தாயே! தந்தையின் கட் டளை யில்லாவிட்டாலென்ன? உமது சொல் லைத் தட்டுவேனு? என் தம்பி பெறும் செல் வம் என்னுடைய தல்லவா? அம்மணி, நான் அப்படியே கானகம் போய் வருகின்றேன் இதோ புறப்படு கின்றேன். விடைதர வேண்டுகின்றேன்" என்று சொல்லி, மூன்று முறை அவர்களை வலம்வந்து பணிந்து பெருமகிழ்ச்சியோடு சென்ருன்.

## V

### ஸ்ரீராமச்சந்திரனின் உறுதி.


இவ்வாறு விடைகொண்டு புறப்பட்ட ராமச்சந்திரன், தன் அன்னை கௌஸல்யையின் திருமாளிகைக்கு வந்தான். இங்கு கௌஸல்யை தன் மகனுக்குப் பட்டாபிஷேகம் நடக்குமென்கிற மகிழ்ச்சியுடனிருந்தாள். ராமச்சந்திரன் பட்டாபிஷேகத்திற்குரிய கோலம் சிறிதுமின்றி இவ்வேளையில் இங்குவந்தமையால் அவன் அப்படிவரக் காரணந் தெரியாமல் கலங்கினுள். ராமச்சந்திரன் வந்ததும் தாயைப்பணிந்து “அம்மா! நான் கானகம் போகின்றேன்; அங்குப் பதினன்கு வருஷம் வசிக்கப்போகின்றேன். பரதன் இந்த ராஜ்யத்தை ஆளப்போகின்ருன். எனக்கு விடை கொடுத்தனுப்பும்” என்ருன். கௌஸல்யை இதைக் கேட்டதும் திடுக்கிட்டு “அப்பா! திடீரென்று இப்படி நேரக் காரணமென்ன? நீஎன்ன குற்றம் செய்தாய்?” என்று கேட்டாள். ராமச்சந்திரன் “அம்மா நான் ஒருகுற்றமும் செய்யவில்லை. சிற்றன்னையார் தந்தையிடம் இரண்டு வரம் அடைந்தாராம். அவ்விரண்டில் ஒன்ருல் எனக்குக் காடும் மற்ருென்ருல் பரதனுக்கு நாடும் தந்தை கொடுத்திருக்கின்ருர்.

031

அவர் வாக்குப்படி நான் கானகம் போகின்றேன். என்னைத் தடுக்காமல் விடை தந்தனுப்பும்'' என்று சொல்லி அன்னையை வலம் வந்து பணிந்து சென்றான். கௌஸல்யை பெருந்துயர மடைந்து தன் நாயகனைக் காணச்சென்றாள்.

2. பிறகு ராமச்சந்திரன் தன் மனைவி ஸீதையினிடம் சென்று செய்திகூறி அவளிடம் விடைகேட்டான். ஸீதை நல்ல குணவதி; ஆகையினாலே, தானும் தன் நாயகனுடன் காட்டுக்குச்செல்ல விரும்பி அவனிடம் உத்தரவு கேட்டாள். ராமன், அவளையும் தன்னுடன் காட்டிற்கு அழைத்துப்போக உடன்பட்டான். ராமன் இவ்வாறு காட்டுக்குப் புறப்பட்ட செய்தி லக்ஷ்மணனுக்குத் தெரிந்தது. லக்ஷ்மணன் உடனே தன் தந்தையின்மீது கோபங் கொண்டான். ராமன் அவனுடைய கோபத்தைத் தணித்துச் சமாதானங்கூறி அவனையும் தன்னோடு காட்டுக் கழைத்துச்செல்ல உடன்பட்டான். கைகேயி இவர்கள் உடுத்துக் கொள்வதற்கு ஒரு தாதியின் மூலமாக மரவுரிகள் கொடுத்தனுப்பினாள். ராமச்சந்திரன் அவைகளை அன்போடு வாங்கி, தான் ஒன்று உடுத்துக் கொண்டு மற்றவைகளைத் தன் மனைவிக்கும்

தம்பிக்கும் தந்தான். இப்பொழுது ராமச்சந்திரனைக் கௌஸல்யை, குரு வஸிஷ்டர், மந்திரி ஸுமந்திரன் மற்றும் யாவரும் காட்டுக்குப்போக வேண்டாமென்று பல நியாயங் கூறித் தடுத்தார்கள்; கைகேயியைச் சினந்து "சண்டாளி! பாபி" என்று திட்டினார்கள்; ராமச்சந்திரன், அவர்களை நோக்கி "நான் என் தந்தையின் கட்டளையை நிறைவேற்றப் புறப்பட்டிருக்கின்றேன்! எனக்கு அதுதான் பெரிது! என்னைத் தடுக்கவேண்டாம்" என்று கூறி இரதம் கொண்டுவரும்படி ஸுமந்திரனுக்குச் சொன்னான். ஸுமந்திரன் உடனே திவ்யரதம் ஒன்று கொண்டு வந்து நிறுத்தினான். பிறகு ராமச்சந்திரன் எல்லோரையும் பணிந்து "போய்வருகின்றேன்; பதினான்கு வருஷத்தையும் நான் பதினான்கு நாள்களாகக் கழித்து வருகின்றேன்" என்றுகூறிப் புறப்பட்டுத் தெருவில் முன்னே இரதஞ்செல்லப் பின்னே தன்மனைவி, லக்ஷ்மணன் இருவருடனும் கால் நடையாகச் சென்றான். நகரத்து ஜனங்களும் பெரியோர்களும் கண்ணும் கண்ணீருமாக ராமனைப் பின் தொடர்ந்தார்கள். ராமச்சந்திரன் நகரக்கோட்டை வாயிலைக் கடந்ததும் எல்லோருக்கும் சமாதானஞ் சொல்லி நிறுத்தி




குகன் ஓடம் விடல்.

விட்டு மனைவியுடனும் லக்ஷ்மணனுடனும் இரதத்திலேறிக் கொண்டான். ஸுமந்திரன் இரதத்தைச் செலுத்தினன்.

## VI

### ஸ்ரீராமச்சந்திரன் பிதிர்வாக்ய பரிபாலனஞ் செய்து திரும்புதல்.

சூரியாஸ்தமனமாய் நன்ருய் இருள் சூழ்ந்தது. இப்பொழுது இரதம் அயோத்தியா நகர எல்லையைக் கடந்து வெகுதூரம்வந்து ஒருகாட்டை அடைந்தது. இந்தக்காட்டில் குகன் என்னும் ஒருவேடராஜன் ராமச்சந்திரன் வரவை அறிந்து அவனை அன்பாய் வரவேற்று நட்புக்கொண்டு வேண்டியசௌகரியங்களைச் செய்தான். ராமச்சந்திரனுக்கும் அவனிடம் நல்ல எண்ணம் உதித்தது. ஆகையால், அவன் குகனைத் தன் தம்பியைப்போல் நேசித்து அன்றிரவை அங்கே கழித்தான்; மறுநாள் ஸுமந்திரனை நகரத்திற்கு இரத்தத்தைச் செலுத்திக்கொண்டு போகும்படி சொல்லி அனுப்பிவிட்டு அந்த வேடராஜனுடைய உதவியால் கங்கையாற்றைக் கடந்து பரத்வாஜர் என்கிற ஒரு முனிவருடைய ஆசிரமம்போய்ச் சேர்ந்தான். ராமச்சந்திரனை அம்முனிவர் அன்பாய் வரவேற்று உபசரணைசெய்து ஆசீர்வதித்து

அனுப்பினர். நல்ல பிள்ளைகளை எல்லோரும் விரும்புவார்க ளல்லவா !

2. பிறகு ராமச்சந்திரன் சித்திரகூட பர்வதம்போய் அங்கே சிலநாள் தங்கி வன விநோதங்களைக்கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது ஒருநாள் பரதன் சத்ருக்நன் இருவரும்வந்து ராமனைப் பணிந்தார்கள். அவர்களுடன் கௌஸல்யை, கைகேயி, ஸுமித்திரை முதலிய மூன்று தாய்மார்களும் வஸிஷ்டரும் வந்திருந்தார்கள். தன்னைவந்து வணங்கிய சகோதரர்களை ராமச்சந்திரன் அன்போடு இருகரங்களாலுந் தூக்கி எடுத்துத் தழுவி மார்போடணைத்துக் கொண்டான்; தாய்மார்களையும் குருவையும் பணிந்தான்; "இங்குவரக் காரணமென்ன?" என்று தம்பிமார்களைப் பார்த்துக் கேட்டான். இப்பொழுது பரதன் கண்களி லிருந்து கண்ணீர் பெருகியது. தொழுத கைகளிரண்டும் தலைமேலிருந்தன. அவன் ராமச்சந்திரனைப் பெருந்துயரத்தோடு பார்த்து "அண்ணா உமது பிரிவாற்றாமல் தந்தை இறந்தார். அவர் இறந்த செய்தி கேட்டு அயோத்தி வந்த நாங்கள், தாம் இவ்வாறு வனத்திற்கு வந்ததையறிந்து, இழவோலை கொண்டுவரும் பறையர்களைப்போல்

தமக்கு அச்செய்தியைச் சொல்லித் தம்மை நகரத்திற்கு அழைத்துப் போக வந்தோம்'' என்றான். ராமச்சந்திரனும் லக்ஷ்மணனும் தந்தை இறந்த செய்தி கேட்டதும் பெருந் துயரமடைந்து அழுதார்கள். ஸீதையும் துயரம் சகியாமல் பெருங்குரலிட்டு அழு தாள். அவர்களை வஸிஷ்டர் தேற்றினர். ராமச்சந்திரன் மந்தாகினி நதியில் தந்தைக் குத் தர்ப்பணஞ் செய்தான்.

3. பிறகு பரதன் ராமச்சந்திரனுக்கு அநேக நியாயங்களைக் கூறி நகரத்திற்கு வந்து இராஜ்யத்தை ஏற்றுக் கொள்ளும்படி கட்டாயப் படுத்தினன். வஸிஷ்டரும் பல நியாயங்கள் கூறினர். ராமச்சந்திரன், "நான் தந்தையின் கட்டளையை நிறைவேற்றுங் கட மையை மேற்கொண்டு வந்திருக்கிறேன். இன்னும் அதை நிறைவேற்றவில்லை. அதை நிறைவேற்றிய பிறகுதான் மற்றென்றை நான் கவனிப்பேன்'' என்று நியாயங் கூறி மறுத்துவிட்டான். பிறகு பரதன் ராமச்சந்தி ரனுடைய பாதுகையைக் கேட்டு வாங்கிக் கொண்டு, "அண்ணா, நீர் நகரம் வரும்வரை யில் இந்தப் பாதுகைதான் அரசுபுரியும்! நாங்கள் இதற்கு வேலையாட்களாக இருப் போம்'' என்று சொல்லி, ராமச்சந்திரனை

வலம் வந்து பணிந்து நகரத்திற்குத் திரும்பினன்.

4. பிறகு ராமச்சந்திரன் பஞ்சவடி தீரத்திற்குச் சென்று அங்கு ஆசிரமம் ஏற்படுத்திக்கொண்டு வசித்தான். அப்பொழுது ஒரு பொன்மான் அவ்வழியே ஓடியது. அதனை ஸீதை தனக்குப் பிடித்துத் தரும்படி கேட்டாள். ராமச்சந்திரன் அம்மானைத் தொடர்ந்து சென்றான். அவனைத் தொடர்ந்து லக்ஷ்மணனும் சென்றான். அப்பொழுது இராவணன் என்னும் ஓர் இராக்ஷஸன் ஸந்நியாஸி வேஷம்பூண்டு ஸீதையினிடம் வந்து அவ்வம்மையைத் தூக்கிக் கொண்டு போய்விட்டான்.

5. பிறகு ராமச்சந்திரனும் லக்ஷ்மணனும் அங்கு வந்து ஸீதையைக் காணமல் வருந்திக் காடுகள்தோறும் சென்று சென்று தேடினர்கள்; அப்படிச் செல்லுகையில் சுக்ரீவன் என்கிற வானர ராஜனுடைய நட்பையும் ஹநுமான் என்கிற ஒரு வானரவீரனுடைய நட்பையும் அடைந்தார்கள்; அவர்களாலே ஸீதாதேவி இராவணனுடைய நகரமாகிய இலங்கை என்னும் தீவில் இருப்பதாகத் தெரிந்து கொண்டார்கள். பிறகு ராமச்சந்திரன் வானர சைந்யங்களோடு

கடலை அணைகட்டிக் கடந்துசென்று அந்தக் கொடிய இராக்ஷஸனை அவன் வமிசத்தோடு நாசஞ்செய்து ஸீதையை மீட்டுக்கொண்டு அயோத்திக்குப் புறப்பட்டான்.

6. இதற்குள் பதினான்குவருஷ வனவாசமும் முடிந்தது. பரதன் ராமச்சந்திரன் பதினான்காவது வருஷமுடிந்த மறுநாள் வந்தாலாயிற்று; இல்லாவிட்டால் தீயில்விழுந்து உயிர் விடுவதென்னும் தீர்மானங் கொண்டிருந்தான். ஆகையால் அவன் அயோத்தியில் தீயில்விழச் சித்தமானான்.

7. ராமச்சந்திரன் தான் சொன்னபடி பதினான்காவது வருஷமுடிந்த மறுநாளில் அயோத்திவந்து சேர்ந்தான். பரதன் ராமச்சந்திரனையும் தன்தம்பியையும் தன் அண்ணியாரையும் பரமானந்தத்தோடு வரவேற்றான்; உடனே பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து முடித்தான். பிறகு உலகமெல்லாம் புகழப் பெரியோர்கள் ஆசீர்வாதம் செய்து வாழ்த்த ராமச்சந்திரனுக்குப் பட்டாபிஷேகம் நடந்தேறியது. "தந்தையின் வாக்கைக் காத்துத் தரணியில் தன்குலத்திற்கு அழியாத புகழை நிலைநிறுத்திய இவனே நல்ல பிள்ளை! இவனே நல்ல பிள்ளை" என்று எல்லோரும் ராமனை வாழ்த்

தினார்கள். பரதனும் இராஜ்யத்தை உரிய வனுக்குக் கொடுத்துத் தன் கடமையைச் செலுத்தினான். — இது ஒருவனிடத்திலே அமைவதற்கரிய நல்ல குணம்—என்று கூறி அவனையும் வாழ்த்தினார்கள். பிறகு ராமச் சந்திரன், தன் புகழ் உலகமெல்லாம் பரவ நீதிதவறாமல் இராஜ்ய பரிபாலனம் செய்து நீடூழிகாலம் சுகமாக வாழ்ந்து வந்தான்.

224308

Printed at the Noble Press Madaas S. E.

5-வது ஆண்டு! 1923 ௵
ஜனவரி முதல் ஆரம்பம்.

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

### சித்திரப் படங்களுடன் கூடிய
### ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

ஆசிரியர்

**வரகவி - திரு- அ. சுப்ரமண்யபாரதி யவர்கள்**

இப்பத்திரிகையில் சிறுவர் சிறுமியர் உள்ளத்தில் பசுமரத்தாணி போல் பதியும்படியான சிறுசிறு நீதிக்கதைகள், புண்ணியக்கதைகள் மனதைக் கவர்ச்சி செய்யக்கூடிய விநோத விசித்திரக் கதைகள், கட்டுக் கதைகள், யோகினிக் கதைகள்; சமயோசிதமாய் நடிக்கத்தக்க நாடகத் தொகுதிகள்; மனதுக்கு மகிழ்ச்சி தரத்தக்க ஹாஸ்யத்துணுக்குகள் மனப்பாடம் செய்யத்தக்க செய்யுள் தொகுதிகள்; நீதிவாக்கியங்கள் பழமொழிகள்; தேசாபிமானத்தை யூட்டும் சரித்திர சம்பந்தமான விஷயங்கள் முதலியன வெகு சுலபமான நடையில், பாஷாபிமானம், தேசாபிமானம், தெய்வபக்தி, நல்லொழுக்கம் முதலியன தழைத்தோங்கும்படியாக எழுதப்பட்டு வருகின்றன.

சமயோசிதமான அழகிய ஆப்டோன் படங்களுடன் வெளிவருவது இதுவே. பிள்ளைகளுக்கும் ஸ்திரீகளுக்கும் வெகு உற்சாகந் தருவதும் இதுவேயாகும். ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்களுக்கு மிகவும் பயன்படக் கூடியதும் இதுவேயாகும்.

வருஷ சந்தா உள் நாடு ரூ. 1—8—0 வெளி நாடு ரூ. 2—0—0
1, 2, 3, 4 வருஷ பைண்டு வால்யம் அழகிய கலிகோ தங்கக்கில்டுடன் கூடியது. ஒவ்வொன்றும் விலை ரூ. 2—0—0.

சந்தாதாரராகச் சேரவிரும்புவோர் சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மணியாடர் செய்யக் கோருகிறோம்.

**மானேஜர், பாலவிநோதினி ஆபீஸ்,**
இராயப்பேட்டை போஸ்டு, சென்னை.

**குறிப்பு.**—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி ரசீது பெற்றுக்கொண்டு ஏஜெண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் போனால் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.